www.tamilarangam.net

# தமிழ் பேசும் மக்களே!

எமது
பாரம்பரியப் பிரதேசங்களைப்
பேணிப் பாதுகாக்க
ஸ்தாபன ரீதியில்
அணிதிரண்டு போராடுவீர்!!

தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி

www.tamilarangam.net

# தமிழினத்தை எதிர்நோக்கும் பேராபத்தை உணர்ந்திடுவோம்! சிந்திப்போம்!! செயற்படுவோம்!!!

தமிழ் பேசும் மக்கள் தொடர்ந்து தாம் நீண்ட நெடுங்காலமாக வாழ்ந்துவந்த தமது பாரம்பரிய பிரதேசங்களை சிறிதுசிறிதாக இழந்துகொண்டு வருகிறார்கள். இந்நிலை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. வெளியில் தேசியவாதி எனக் காண்பித்த போதும் தன்னகத்தே இனவெறிக்கொள்கையை புதைத்து வைத்திருந்த பிற்போக்குவாதியான டி. எஸ். சேனநாயக்கா 1950ம் ஆண்டளவில் கல்லோயாத் திட்டத்துடன் இந்நிலையை ஆரம்பித்து வைத்தார். இதனை தொடர்ந்து வந்த சிங்கள அரசுகள் மேலும் மேலும் அதை முன்னெடுத்தன. கல்லோயாவைத் தொடர்ந்து அல்லை, கந்தளாய், பதவியா இன்னும் பல இடங்களில் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்கள் நடைபெற்றன. தமிழ்ப் பிரதேசங்கள் சிங்களப்பிரதேசங்களாயின. தமிழ்ப்பெயர்கள் சிங்களப் பெயர்களாயின. பட்டிப்பளை கல்லோயாவாகவும், பறையனாறு பதவியாவாகவும் மாற்றப்பட்டன. இத்துடன் நில்லாது குடியேற்றங்களுக்கு அண்மையில் உள்ள தமிழ்க் கிராமங்கள் அயலில் குடியேறிய சிங்கள மக்களால் பறிக்கப்பட்டன அல்லது அவர்களின் அச்சுறுத்தலால் அங்கிருந்த தமிழ் மக்கள் இடம் பெயர்ந்தனர். அம்பாறையிலுள்ள 17ம், 25ம் கொலனிகளில் இவ்வகையான நிலை இன்றும் தொடர்கின்றது. இவற்றுக்கு அரசும், ஆயுதப்படையும் துணை போகின்றன. இதைவிட தமிழ்ப் பகுதியிலுள்ள காடுகளில் பலர் அத்துமீறிக் குடியேறினர். இவர்களுக்கு அரசு பெர்மிட் வழங்கியது. ஆனால் இவ்விதம் குடியேறிய தமிழ்க் கூலிவிவசாயிகள் இரவோடிரவாக ஆயுதப்படையினரால் குடிசைகள் எரிக்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டனர். கடந்த அரசாங்க காலத்தில் தோட்டங்களில் இருந்து துரத்தப்பட்ட அநாதரவான மலையக மக்கள் கிழக்கு மாகாணத்தில் உள்ள புனையில் காடு வெட்டி குடியேறினர். அவர்கள் மனிதாபிமானமற்ற முறையில் மிருகத்தனமாக வீடுகள் எரிக்கப்பட்டு துரத்தியடிக்கப்பட்டது தமிழ் மக்கள் அறிந்ததே. இவை மட்டுமா, தமிழ் மக்களின் முக்கிய நகரங்களில் ஒன்றான திருகோணமலை முற்றாக பறிபோகும் நிலையில் இன்று உள்ளது. அங்கு பெருமளவில் ஆயுதப்படையினர் குவிக்

www.tamilarangam.net

கப்பட்டுள்ளனர். திட்டமிட்ட முறையில் தமிழ்ப் பிரதேசங்களில் பௌத்த விகாரைகள் கட்டப்படுவது மட்டுமல்ல; பண்டைய சின்னங்களும் கண்டெடுக்கப்படுவதாக பொய்களைப் பரப்பி மேலும் விகாரைகளை எழுப்புகின்றனர். இவை உண்மையில் பௌத்த மதத்திற்கே விரோதமானவையாகும்.

தற்போதைய அரசு பதவிக்கு வந்தவுடனேயே 'தர்மிஸ்டர்' ஜே.ஆர். ஜெயவர்த்தனா தாம், டி. எஸ். சேனநாயக்காவின் காணிக் கொள்கைகளை அமுல்படுத்தப்போவதாக அப்பட்டமாகவே கூறிவைத்தார். மேலும் இந்நாட்டில் எப்பகுதியிலும் யாவரும் வாழலாம் எனக்கூறியதின் மூலம் தமிழ் மக்களை சிதறடிக்கும் தனது உள்நோக்கத்தை வெட்டவெளிச்சமாக மக்கள் முன்வைத்தார். வவுனியாவுடன் மதவாச்சியின் சில பகுதிகளை இணைத்து தமிழ்ப் பிரதேசங்களைப் பறிக்கும் தனது திட்டத்தை கொண்டு வந்தார். பின்னர் எதிர்ப்புக் காட்டப்பட்டதால் இணைப்பு முயற்சி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதுவும் வவுனியாப் பிரதேசத்தைப் பறிக்கும் உள்நோக்குடனேயே செய்யப்பட்டது. இதனை இன்றைய தமிழ்த் தலைமையும் ஏற்றுக்கொண்டுள்ளது. சில அற்ப சலுகைகளுக்காக தொகுதி நிர்ணய கமிஷனில் வலிந்து சென்று தமிழ்த் தலைவர்கள் சாட்சியமளித்து சேருவாவில தொகுதி உருவாகுவதற்கு வழி சமைத்தனர். இன்று சேருவாவில பெருமளவு செலவில் 'புனித' நகராக்கப்பட்டுள்ளது. அப்பகுதி முழுவதுமே சிங்கள மயமாக்கப்பட்டுள்ளது. இனவெறியரான சிறில் மத்தியூ புனித நகர்த் திட்டத்திற்கு பொறுப்பாக அமர்த்தப்பட்டார். கல்முனைக்கு அண்மையில் உள்ள தீகவாப்பி புனித நகர்த் திட்டத்திற்கு அங்குள்ள முஸ்லீம் மக்களின் வயல்கள் பறிக்கப்பட்டன. இப்பொழுது திரியாய் புனித நகர்த் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. திரியாய் புனித நகராக்கப்பட்டு சிங்களமயமாக்கப்பட்டால் தமிழ் மக்களின் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களின் தொடர்ச்சி துண்டிக்கப்படும். தமிழ் மக்கள் சிங்கள மக்களின் பிரதேசங்களினூடாகவே மற்றைய தமிழ்ப் பிரதேசங்கட்கு செல்லவேண்டிய நிலை ஏற்படும். மூதூர் பகுதியிலும் ஏற்கெனவே திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

இவையெல்லாவற்றையும் விட தமிழர்களின் பாதுகாப்பையே அச்சுறுத்தும் வகையில் நெடுங்கேணியில் உள்ள அரியகுண்டானில் சிங்களக் குடியேற்றத்திற்கு முயற்சி செய்யப்பட்டு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. இது தொடரும் என்பதில் ஐயமில்லை. 1950இலிருந்து இன்று வரை ஏறத்தாள 2000 சதுர மைல் பாரம்பரிய தமிழ்ப் பிரதேசம் பறிபோய் விட்டது. இப்படியே தொடருமாயின் இன்னும் சில காலத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் மக்களுக்கென்று தனியான பிரதேசமிருக்காது. நாம் தேசிய இனம் என்ற நிலையிலிருந்து வெறும் சிறுபான்மையினர் என்ற நிலைக்குத் தாழ்ந்து விடுவோம்.

தமிழ் மக்களின் தலைமைகள் 1950இலிருந்து இன்று வரைக்கும் சரியான வழியில் இதற்கெதிராக போராடத் தவறிவிட்டன. பணபலமும் செல்வாக்கும் கொண்ட இவர்கள் செயல்பூர்வமான பிரதேசப் பாதுகாப்பிற்கான நடைமுறை சார்ந்த வேலைத்திட்டமின்றி தனியே பாராளுமன்ற நாற்காலிகளை கைப்பற்றும் நோக்குடனேயே பிரதேசப் பாதுகாப்புப் பற்றி வெற்றுக் கூச்சலிட்டு வருகின்றனர். இவர்களது ''தமிழ் நாடு காண்போம்'', ''தமிழ்த் தேசிய மன்றம் அமைப்போம்'', ''திருகோணமலையைத் தலைநகராக்குவோம்'' எனக் கடந்த தேர்தல் மேடைகளில் பேசிய வீராவேசப் பேச்சுக்கள் மேலும் மேலும் சிங்களப் பெருமினவாத ஆளும் வர்க்கத்தை உஷார்ப்படுத்தியதேயல்லாமல் வேறு பயன்களைத் தரவில்லை. உண்மையில் செயலூக்கம் கொண்ட உணர்வு பூர்வமான இளைஞர் சமுதாயத்தை ஆக்கபூர்வமான முறையில் பயன் படுத்துவதற்கு பதிலாக தனியே தமது பாராளுமன்ற பதவிகளுக்கு மாத்திரம் பாவித்து இப்போது அவர்களை நட்டாற்றில் விட்ட துரோகத் தனம் இவர்களது முகமூடியை கிழித்தெறிந்துள்ளது. இவர்களுக்கு உண்மையில் பிரதேசம் பறிபோதல் பற்றி உணர்வுபூர்வமான சிந்தனையில்லை. காலத்திற்குக் காலம் மக்களின் உணர்வைத் தட்டி வாக்குப் பறிக்கும் கோரிக்கைகளான மொழி, வேலைவாய்ப்பு போன்றதாகவே இதனையும் கருதுகின்றனர். கடந்த அரசாங்க காலத்தில் பெரும்பான்மையான தமிழ் பிரதிநிதிகள் பன்முகப்படுத்திய வரவு செலவுத் திட்டத்தைத் தானும் உபயோகிக்காது, அவை தமது கடமையல்ல, தமிழ் ஈழத்தைக் காண்பதே தமது கடமை என்றவர்கள் இன்று பன்முக வரவு செலவுத் திட்டத்தை பங்கீடுசெய்வதற்கு ஆலோசனை கூறும் அதிகாரத்தை மட்டும் கொண்ட மாவட்ட அபிவிருத்தி சபைகள் பற்றி பெரிதாக பிரஸ்தாபிப் பதில் இருந்து இவர்களது போராட்ட தந்திரோபாயங்களை மக்கள் இனங் கண்டுகொள்ள முடியும்.

மறுபுறத்தில் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கு பல்வேறு இடதுசாரிக் கட்சிகளும் சரியான தீர்வை முன்வைத்துப் போராடத் தவறி விட்டன. பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகளான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி என்பன பாராளுமன்ற சந்தர்ப்ப வாதத்தினுள் மூழ்கி பெருமினவாதத்திற்கு அடிபணிந்தனர். புரட்சிகர மார்க்கத்தை முன்னெடுத்த பல்வேறு ஸ்தாபனங்களும் தேசிய இனப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரச்சினையின் யதார்த்த நிலைமையை கணக்கிலெடுக்கவும் அதற்கான நடைமுறை வேலைகளை முன்னெடுக்கவும் தவறி விட்டன. ஜனதா விமுக்தி பெரமுன வெளியில் சமத்துவம் பற்றிப் பேசினாலும் அவர்களின் தேசிய இனப் பிரச்சினை பற்றிய கொள்கையின் சாராம்சம் ஜே. ஆரின் கொள்கையை ஒத்ததாகவேயுள்ளது. சிங்கள மக்கள் மத்தியில் இன்று சில தனிநபர்களோ, அல்லது குழுக்களோ இப் பிரச்சினையில் அக்கறை கொண்டாலும் அவர்களால் ஸ்தாபன ரீதியான பங்களிப்பைச் செய்யும் நிலையில் இன்று இல்லை என்பதே யதார்த்தமாகும். எனவே இன்று நாட்டிலுள்ள உண்மையான சூழ்நிலையைக் கருதுகின்ற பொழுது, தமது பாரம்பரியப் பிரதேசங்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பு இன்று என்றுமில்லாதவாறு முழு தமிழ் மக்களின் தலை மீதும் சுமத்தப்பட்டுள்ளது.

இன்று வடகிழக்குப் பகுதிகளில் வாழும் மக்கள் அச்சத்துடனேயே வாழ்கின்றனர். குறிப்பாக சிங்களக் குடியேற்றத் திட்டங்களிற்கு அண்மையில் வாழும் மக்கள் பெரும் பீதியுடனேயே இருக்கின்றனர். மற்றைய பகுதிகளில் உள்ள மக்கள் அவற்றின் பாதிப்பை இன்று உணராத நிலையில் இருக்கின்றார்கள். இவ்வபாயத்தை அவர்களுக்கு உணரவைத்தல் வேண்டும். இந்நிலையில் வெறும் அறிக்கை விடுவதன் மூலமாகவோ அன்றி பாராளுமன்றத்தில் பேசுவதாலோ எமது பிரதேசங்களைப் பாதுகாக்க முடியாது என்பதும் அதனை இன்றைய சம்பிரதாய தமிழ்த் தலைமையால் முன்னெடுக்க முடியாது என்பதையும் கடந்த கால வரலாறுகள் காண்பிக்கின்றன. நாம் தனித்துவமிழந்து, உரிமையிழந்து, தன்மானமிழந்து வாழ்வதா அன்றி போராடி எமது பிரதேசங்களை பாதுகாப்பதா என்பது இன்று எமது வாழ்விற்கும் சாவிற்குமான போராட்டமாகியுள்ளது. இதற்காக, மக்கள் மத்தியில் உண்மை நிலைமையை விளக்கி அவர்களை அணிதிரட்டிப் போராடுவதன் மூலமே இன்று இழந்து கொண்டிருக்கும் தமிழ்ப் பிரதேசங்களைப் பாதுகாக்க முடியும். இதனை பாராளுமன்றம் செல்ல வைக்கும் கோஷமாக நாம் முன்வைக்கவில்லை. உண்மையில் தமிழ் மக்களின் நல்வாழ்விலும், எதிர்காலத்திலும் அக்கறையுள்ள சகல சக்திகளும் ஐக்கியப்பட்டு ஸ்தாபன ரீதியாக எமது பிரதேசங்களைப் பாதுகாக்க போராட முன்வருமாறு அறைகூவல் விடுக்கின்றோம்.

**தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி**


*யாழ்ப்பாணம் 15-7-1980*

---

இப்பிரசுரம் நெடுந்தீவைச் சேர்ந்த திரு. சி. சண்முகநாதன் அவர்களால் யாழ்ப்பாணம், 411, ஸ்ரான்லி வீதியிலுள்ள நொதேர்ண் பிறின்ரேர்ஸில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

www.tamilarangam.net

எதிர்காலத்தில் தமிழினத்தைச் சிதறடிக்கும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்ற நடைமுறைகளை வெறும் தேர்தல் மேடைப் பேச்சுக்களால் முறியடிக்க இயலுமா?




மேலேயுள்ள வரைபடம் தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த பிரதேசங்கள் சிங்கள பெருமினவாதிகளால் நேரடியாகவும், மறைமுகமாகவும் திட்டமிட்டு கபளீகரம் செய்யப்பட்டு வருவதைக் காண்பிக்கின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்